දුරකථන
தொலைபேசி
Telephones
011-2136600
011-2136650

ලේකම්
செயலாளர்
Secretary
011-2136602

ෆැක්ස්
தொலைநகல்
Fax
011-2876169
011-2876181

විද්‍යුත් තැපැල
மின் - அஞ்சல்
E-mail
info@psc.gov.lk

වෙබ් අඩවිය
இணையத்தளம்
Website
www.psc.gov.lk

රාජ්‍ය සේවා කොමිෂන් සභා කාර්යාලය
அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்
**OFFICE OF THE PUBLIC SERVICE COMMISSION**

අංක 1200/9, රජමල්වත්ත පාර, බත්තරමුල්ල
இல. 1200/9, இரஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை
**No. 1200/9, Rajamalwatta Road, Battaramulla**

මගේ අංකය
எனது இல.
My No.
PSC/EST/09-08/01/2020

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date
2023.12.

அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம்: 05/2023

அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்கள்,
அனைத்து திணைக்களத் தலைவர்கள்,

<u>அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நடைமுறைப்படுத்தப்படும் அதிகாரங்கள் தொடர்பில் நிருவாகப் பணிகளுக்குப் பொறுப்பான அதிகாரிகளைப் பெயரிடுதல்</u>

2310/29 ஆம் இலக்க மற்றும் 2022.12.14 ஆம் திகதிய அரசாங்கத்தின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளின் XXII ஆம் அத்தியாயத்தின் XIV ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் அட்டவணையின் (அ) நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள சேவைகள் மற்றும் பதவிகள் தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நடைமுறைப்படுத்தப்படும் அதிகாரங்களுக்கு அமைவாக நிருவாகப் பணிகளுக்குப் பொறுப்பாக செயற்படுவதற்கு அதன் (ஆ) நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் பெயரிடப்பட்டுள்ளனர் என்பதை இத்தால் அறியத் தருகிறேன்.

| | அதிகாரக் கையளிப்பிற்கு உட்படும் சேவைகள்/உத்தியோகத்தர்கள் (அ) | நிருவாகப் பணிகள் கையளிக்கப்படும் அதிகாரிகள் (ஆ) |
|---|---|---|
| I | i. இலங்கை நிர்வாக சேவை<br>ii. இலங்கை பொறியியலாளர் சேவை<br>iii. இலங்கை விஞ்ஞானவியல் சேவை<br>iv. இலங்கை கட்டிடக் கலைஞர் சேவை<br>v. இலங்கை கணக்காளர் சேவை<br>vi. இலங்கை திட்டமிடல் சேவை | அரசாங்க நிர்வாகம் எனும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் |
| II | இலங்கை விவசாய சேவை | விவசாயம் எனும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் |
| III | இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவை | கால்நடை அபிவிருத்தி எனும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் |
| IV | இலங்கை நில அளவையாளர் சேவை | நில அளவை எனும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் |
| V | நாடளாவிய சேவைகளில் உள்ளடங்காத, பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 06/2006 இன் இணைப்பு (II) இல் பொருள்கோடப்பட்டுள்ள சிரேஷ்ட மட்ட | பதவி உள்ளடங்கும் அமைச்சு அல்லது பதவி உள்ளடங்கும் திணைக்களத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் |

| | | |
|---|---|---|
| | மற்றும் அதனிலும் உயர்ந்த மட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் மூன்றாம் மட்ட அதியுயர் தரத்தைச் சேர்ந்த /விசேட தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள், | |
| VI | நாடளாவிய சேவைகளில் உள்ளடங்காத மற்றும் அமைச்சொன்றின் கீழ் வராத பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 06/2006 இன் இணைப்பு (II) இல் பொருள்கோடப்பட்டுள்ள சிரேஷ்ட மட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் மூன்றாம் மட்ட அதியுயர் தரத்தைச் சேர்ந்த /விசேட தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள், | ஏற்புடைய திணைக்களத் தலைவர் |
| VII | இலங்கை தொழிநுட்ப சேவையின் அதியுயர் தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள்<br><br>இணைந்த சேவையின் அதியுயர் தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் | அரசாங்க நிர்வாகம் எனும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் |

02. மேற்குறித்த (ஆ) நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள அமைச்சுச் செயலாளர் ஒருவரின் நிருவாக அதிகாரத்தின் கீழ் வரக்கூடிய (அ) நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு சேவை/பதவிக்கு ஏற்புடைய விடயம் தொடர்பில் தீர்மானமெடுப்பதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்குத் தேவைப்படும் பரிந்துரையை, அவதானிப்பை அல்லது வேறு ஒரு தகவலைத் தமக்குப் பதிலாக அந்த ஆணைக்குழுவிடம் சமர்ப்பிப்பதன் பொருட்டு குறித்த அனைத்து செயலாளர்களும் தமது அமைச்சின் வேறு ஒரு உத்தியோகத்தரைப் பெயரிட முடியும் என்பதுடன் அதன் பொருட்டு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

03. மேற்குறித்த 02 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமைச்சுச் செயலாளர் ஒருவரினால் பெயரிடப்பட்டுள்ள உத்தியோகத்தர் தனது செயலாளருக்குப் பதிலாகப் பரிந்துரைகளை, அவதானிப்புக்களை அல்லது வேறு தகவல்களை அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கையில் பின்வரும் தொடரைத் தனது கடிதத்தில் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

"............ அமைச்சின் செயலாளரின் பணிப்பிற்கமைய செயலாளருக்குப் பதிலாக சமர்ப்பிக்கின்றேன்."

04. இந்த சுற்றறிக்கை 2023.12.20 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படுவதையடுத்து இந்த விடயம் தொடர்பில் இதற்கு முன்னர் வெளியிடப்பட்டுள்ள 2011.12.13 ஆம் திகதிய அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை 05/2011, ஆணைக்குழுவினால் அல்லது வேறு ஒரு உரிய அதிகாரியினால் குறித்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்டுள்ள எந்தவொரு விடயத்திற்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் இரத்துச் செய்யப்படும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

டப்ளியூ.எச்.எம்.எம்.சீ.கே.தயாரத்ன

செயலாளர்

அரசாங்க சேவை ஆணைக்குழு